**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KRISHNAGIRI**

**<u>O.S No. 54/2018</u>**

**PW.1** is solemnly affirmed on **19.06.2024** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | மகேஸ்வரி (எ) உமாமகேஸ்வரி | Husband Name | வெங்கடசாமி |
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

**முதல் விசாரணை :**

இந்த வழக்கில் நான் வாதி ஆவேன். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது என்னுடைய கையொப்பம்தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். எனவே, அதனை என்னுடைய சாட்சியமாக கருத வேண்டுகிறேன். வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 26.02.2001 தேதியிட்ட லட்சுமணன் பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல்.

2) 31.10.2007 தேதியிட்ட சரஸ்வதி பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல்.

3) 07.02.2013 தேதியிட்ட M. வேலன் பெயரிலுள்ள கிரய ஆவணத்தின் நகல்.

4) 04.6.2017 தேதியிட்ட எனது தந்தை K.N. சுப்ரமணியின் இறப்பு சான்றிதழின் நகல்.

5) 25.09.2017 தேதியிட்ட நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல்.

6) 03.10.2017 தேதியிட்ட 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் திருப்பப்பட்ட அஞ்சலக உறையின் அசல்.

7) 26.09.2017 தேதியிட்ட 2 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் திருப்பப்பட்ட அஞ்சலக உறையின் அசல்.

8) 26.09.2017 தேதியிட்ட 3 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் திருப்பப்பட்ட அஞ்சலக உறையின் அசல்.

9) 26.09.2017 தேதியிட்ட 4 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் திருப்பப்பட்ட அஞ்சலக உறையின் அசல்.

10) 03.10.2017 தேதியிட்ட 5 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் திருப்பப்பட்ட அஞ்சலக உறையின் அசல்.

11) கணினி பட்டா, பட்டா எண். 35 - ன் நகல்.

12) கணினி பட்டா, பட்டா எண். 505 - ன் நகல்.

13) 24.06.2019 தேதியிட்ட 5 ம் பிரதிவாதிக்கு, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த விடுதலை ஆவணத்தின் சான்றிட்ட நகல்.

14) வழிகாட்டி மதிப்பு சர்வே எண். 44/3A மற்றும் 44/2C ன் சான்றிட்ட நகல்.

15) 24.10.1995 தேதியிட்ட எனது தாயார் காந்தம்மாள் என்பவரின் இறப்பு சான்றின் அசல்.

16) 28.03.2018 தேதியிட்ட என்னுடைய மாற்று சான்றிதழின் அசல்.

17) 26.08.1994 தேதியிட்ட எனது திருமண அழைப்பிதழின் அசல்.

எனது நிருபண பிரமாண வாக்குமூலத்தையும், என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்சொன்ன ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்து ஏற்றுக்கொண்டு, வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal District Judge,
Krishnagiri.